கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.144/2016** **PW: 1** **14.08.2025**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **14** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சிவசாமி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவசாமி | வயது | 80 |
| த. பெயர் | வடிவேல் படையாட்சி | தொழில் | - |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | டி.ஏந்தல் |
| மாவட்டம் | கடலூர் | | |

## குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை மற்றும் கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 4 வரைபடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.த.சா.ஆ 4 வரைபடத்தில் A schedule சொத்தில் 1 வது இனச்சொத்து மற்றும் 2 வது இனச்சொத்து என தனித்தனியாக பிரித்து காட்டவில்லை என்றால் பிரித்து காட்டவேண்டும் என்று என்னிடம் கேட்கவில்லை அதனால் நான் பிரித்து காட்டவில்லை மேலும் மொத்த சொத்தும் எங்களது சொத்துதான். வா.த.சா.ஆ 4 வரைபடத்தில் B schedule சொத்து எங்குள்ளது என்றால் எனக்கு காட்ட தெரியாது. என்னுடைய வழக்கு சொத்திற்கான தற்போதைய நான்கெல்லைகள் தெரியுமா என்றால் வடக்கில் இளங்கோவன், தெற்கில் மருதை மகன் வாங்கியுள்ளார், மேற்கில் பெரியசாமி, மாயவேல், கிழக்கில் கதிர்வேல் மகள். அவள் பெயர் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய சொத்திற்கு எந்த நான்கெல்லையில் 1 ம் எதிர்வாதியான ராணி உள்ளார் என்றால் கிழக்கு பக்கம். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ராணி அவர்களின் ஆவணத்தை சரிபார்த்தேனா என்றாலும் ராணி எவ்வளவு விஸ்திரனம் கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றாலும் எனக்கு ஞாபகமில்லை. நான் ராணி அவர்களின் சொத்திற்கு வில்லங்கச் சான்று சரிபார்த்தேனா என்றால் நான் பார்த்துதான் என் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். ராணி சொத்திற்கான வில்லங்கச்சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு 5 சகோதரிகள் உள்ளனர். மங்களம், மருதம்மாள், தனபாக்கியம் இவர்கள் மூவரும் மூத்தவர்கள். அஞ்சலம் மற்றும் ருக்மணி இவர்கள் இருவரும் இளையவர்கள். அனைவருக்கும் திருமணம் ஆகி விட்டது. மங்களம் அவர்களுக்கு 95 வயது இருக்கும். மருதம்மாள் அவர்களுக்கு 85 வயது இருக்கும். தனபாக்கியம்

அவர்களுக்கு 82 வயது இருக்கும். பிரதிவாதி ராணி என்னுடைய உறவினர் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியான ராமசந்திரன் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். ராணி அவர்களின் வீட்டு விசேஷங்கள் அனைத்திற்கும் நான் கலந்து கொள்வேன் என்றால் சரிதான். ராணி எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் ராமநத்தம். ராணி ராமநத்தத்திலிருந்து என் ஊருக்கு வந்து சொத்து வாங்கினார் என்றால் எனது கொல்லை பக்கத்தில் ராணியின் தந்தை கொல்லை உள்ளது. அதன் பக்கத்தில் ரூ.10,000/- த்திற்கு ராணியின் தந்தை வாங்கி கொடுத்தார். ராணியின் தந்தை பெயர் தங்கவேல் படையாட்சி. எனக்கு டி.ஏந்தல் கிராமத்தை சேர்ந்த ரங்கசாமி படையாட்சி மகன் நாராயணசாமி படையாட்சி தெரியுமா என்றால் தெரியும். நாராயணசாமி படையாட்சி எனக்கு உறவினரா என்றால் ராணி வழியில் உறவினர் ஆவார். ராணி எந்த வருடம் கிரயம் பெற்றார் என்றால் நான் 1972 ல் கிரயம் வாங்கினேன், நான் வாங்கி 10 வருடம் களித்து 1982 ம் வருடத்தில் கிரயம் வாங்கியுள்ளார். அந்த வருடத்தில் சார்பதிவாளர் அலுவலகம் எந்த இடத்தில் உள்ளது என்றால் திட்டக்குடி. 3 ம் பிரதிவாதியான தியாகராஜன் எந்த வருடத்தில் ராணியிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் எனது கொல்லையை அளக்க வரும்போது தான் தியாகராஜன் கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். எந்த தேதியில் அளந்தார்கள் தெரியுமா என்றால் தேதி ஞாபகமில்லை ஆனால் 2016 ம் ஆண்டில் அளந்தார்கள். நீதிமன்றத்தில் இருந்து அளந்தார்களா அல்லது தனிப்பட்ட முறையில் வந்து அளந்தார்களா என்றால் நீதிமன்றத்தில் இருந்து வந்து அளந்தார்கள். எனக்கு தெரிந்த பின்பு நான் என் வழக்கறிஞரிடம் எப்போது சொன்னேன் என்றால் 2 அல்லது 3 நாட்களில் சொன்னேன். நான் ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவித்து ஆணையரை மீண்டும் வழக்கு சொத்தை அளக்க மனு தாக்கல் செய்தேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். என் வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(S/d. N.Shalini)**
Additional District Munsif,
Tittagudi.